**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ATTUR.**

**DEPOSITION OF WITNESS**

**Sessions Case No.278/2018**

**Prosecution witness. No : 8**

| | |
|---|---|
| **Name** | **: தமிழரசன்** |
| **Father's Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**(All Accused Present. Counsel present. )**

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 28.04.2025.**

அரசு தரப்பில் முதல் விசாரணை:-

1) நான் வீரகனூர் கிழக்கு வீதியில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். உள்ளூர்காரர்கள் தான். அ.சா.1, 2, 3 அவர்களை தெரியுமா என்றால் தெரியும். அவர்களும் உள்ளூர் தான். நான் சம்பவத்தை பார்க்கவில்லை. எனக்கு சம்பவம் பற்றி தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ளது என்னுடைய கையெழுத்து இல்லை. சாட்சி பின்னிட்டு கையெழுத்து என்னுடையது தான் என்று கூறுகிறார். காவல் நிலையத்தில் கூட்டமாக இருந்தார்கள். மேற்படி பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.**2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**சாட்சி பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

1) 19.12.2017ம் தேதி மதியம் 14 மணிக்கு அங்குசாமி வீட்டின் அருகில் நானும், எங்கள் தெருவை சேர்ந்த செந்தில் , த/பெ. அங்கமுத்து நின்று கொண்டிருந்த போது அங்குசாமியை தன்ராஜ் மற்றும் அவரின் தம்பி மாசிலா மணி, அவரின் தங்கை சிலம்பரசி ஆகியோர் அடித்து விட்ட செத்துபோய்விட்டார்கள் என்று ஓடிவிட்டனர். அது பற்றி வீரகனூர் காவல் நிலையத்தில் காவல்ர்கள் விசாரணை செய்து என் முன்பாக மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து பார்வை மகஜரில் கையெழுத்து வாங்கினார்கள் என்றும், அதில் நான் கையெழுத்து செய்துவிட்டு போலீசில் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிகள் எங்கள் ஊர்காரர்கள் என்பதாலும், எங்கள் சமூகத்தை சார்ந்தவர்கள் என்பதாலும், அவர்களை காப்பாற்ற வேண்டி சம்பவத்தை பார்க்கவில்லை என்று மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-இல்லை.**

என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S
Date: 2025.04.28 18:25:46 +0530

**Assistant Session Judge,**
**Attur.**